| PG–433 | MAT–21 |
| --- | --- |

# M.A. DEGREE EXAMINATION
# DECEMBER, 2019.

## Second Year

## Tamil

### சங்க இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

I. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

1. பன்னிருகைகளின் தொழில்களைத் திருமுருகாற்றுப்படை கொண்டு விளக்குக.

2. சோழநாட்டின் சிறப்பினைக் பட்டினப்பாலை வழிநின்று விளக்குக.

3. காதற்பரத்தைக் கூற்றுக்களை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

4. தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்பினைக் குன்றூர்கிழார் பாடல் மூலம் புலப்படுத்துக.

5. பாலை பாடிய பெருங்கடுங்கோவின் தோழிகூற்றுப் பாடல்களின் நயத்தினை விளக்குக.

6. பரணரின் புலமை நயத்தை விளக்குக.

7. சுரநெறியின் கொடுமையை அகநானூறு கொண்டு நிறுவுக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

II. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் நான்கு பக்க அளவில் விடையளிக்க.

8. குறுந்தொகைப் பாடல்களின் வாயிலாக நீவிர் அறிந்த செய்திகளைக் கட்டுரைக்க.

9. அகநானூறு பண்டைய வரலாற்றுக் கருவூலம் என்பதை நிறுவுக.

10. எருமைப்பத்தில் அமைந்துள்ள உள்ளுறைகளைச் சுட்டிக் கட்டுரைக்க.

11. பதிற்றுப்பத்தில் செங்குட்டுவனின் கொடை மாண்பினை பரணர் எவ்வாறு பாராட்டுகின்றார்? என்பதை விளக்கியுரைக்க.

12. மைந்தரும் மகளிரும் வையைப் புனலில் ஆடிய திறத்தினைப் புலப்படுத்துக.

13. குறிஞ்சிக்கலியில் காணலாகும் நாடகப் பாங்கினைப் புலப்படுத்துக.

14. இளவேனிற் பருவம் பாலைக்கலியில் சித்தரிக்கப்படுமாற்றை விளக்குக.

———————

| | |
|---|---|
| **PG – 434** | **MAT–22** |

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2019.

Second Year

தமிழ்

காப்பிய இலக்கியம்

Time : 3 hours                                    Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.

1. காப்பியம் என்பதை வரையறை செய்க.

2. கானல்வரி – குறிப்பு வரைக.

3. கோவலனின் பண்பு நலன்களைச் சுட்டுக.

4. மணிமேகலையில் இடம்பெறும் நம்பிக்கைகள் பற்றி எழுதுக.

5. சீவகசிந்தாமணி காப்பியத்தை அறிமுகம் செய்க.

6. கம்பராமாயணக் காப்பிய உத்திகளை நும் பாடப்பகுதி மூலம் விளக்குக.

7. தேம்பாவணி – குறிப்பு வரைக.

பகுதி ஆ — ($5 \times 10 = 50$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விரிவான விடையளி.

8. சிலப்பதிகாரக் காப்பிய உத்திகளை விவரி.

9. மதுரைக் காண்டத்தின் கதைப் போக்கை விவரி.

10. சக்கரவாளக் கோட்டத்தின் சிறப்புகளை விவரி.

11. சீவகன் பெற்ற மந்திரங்கள் யாவை?

12. கம்பராமாயணம் சுட்டும் கும்பகர்ணனின் நிலைகளை விவரி.

13. வில்லிபுத்தூராரின் போர்க்கள வருணனையை விவரி.

14. சீறாப்புராணத்தின் கதையமைப்பை விளக்குக.

———————

| **PG-435** | **MAT–23** |
|---|---|

M.A. DEGREE EXAMINATION –
DECEMBER, 2019.

Second Year

Tamil

இலக்கணம் - தொல்காப்பியம் - பொருளதிகாரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

1. திணை மயக்கம் குறித்து எழுதுக.

2. மறையோர் தேயத்து மன்றல் யாவை? விளக்குக

3. எண்வகை மெய்ப்பாடுகள் தோன்றும் நிலைக்களன்கள் குறித்து விளக்குக.

4. செய்யுள் உறுப்புகள் எவையெவை?

5. அகமாந்தர்களுக்கும் உவமைக்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

6. ‘வாகை தானே பாலையது புறனே’ - விளக்குக.

7. “நாலிரண்டாகும் பாலுமாருண்டே” - விளக்குக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் நான்கு பக்க அளவில் விடையளிக்க

8. உலகத் தோற்றம் குறித்து தொல்காப்பியரின் கருத்தை விளக்கியெழுதுக.

9. பழந்தமிழரின் போர்முறைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

10. பாடாண்திணையின் இலக்கணம் யாது? அதன் துறைகள் பற்றி விவரி.

11. களவில் தலைவியின் பண்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

12. இறைச்சி - உள்ளுறை சான்றுகளுடன் விவரி.

13. உவமையியல் அமைப்பும் கருத்தும் குறித்து விளக்கியெழுதுக.

14. கற்பு வாழ்வில் தலைமகனுக்குறிய கூற்றிடங்கள் பற்றிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

———————

| PG–436 | MAT–24 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2019.

Second Year

தமிழ்

ஒப்பிலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விடையளி.

1. ஒப்பிலக்கியத்தின் பலன்கள் யாவை?

2. ஒப்பிலக்கியம் குறித்துப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறுவன யாவை?

3. திராவிடமொழி இலக்கியங்கள் குறித்து எழுதுக.

4. அறிவியலும் அழகியலும் குறித்து எழுதுக.

5. பிரெஞ்சுக் கோட்பாடு என்பதை விளக்குக.

6. ஒப்பிலக்கியத்தில் உளவியலின் பங்கு யாது?

7. தமிழில் திரைப்படமான இலக்கியங்கள் குறித்து எழுதுக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விரிவாக விடையளி.

8. இலக்கிய வகைகள் – வடிவங்கள் என்பதை விவரி.

9. தமிழ் ஒப்பிலக்கிய முன்னோடிகளை அறிமுகம் செய்க.

10. ஒப்பிலக்கியத்தில் சார்பியல் கோட்பாடு என்பதை விவரி.

11. கிரேக்க, இலத்தீன், செவ்வியல் இலக்கிய மரபுகளைத் தொகுத்துரைக்க.

12. காப்பியக் காலம் என்பதன் இயல்புகளை விவரி.

13. இலக்கியமும் சமூகவியலும் குறித்து விவரி.

14. இலக்கியங்களில் மேனாட்டுத் தாக்கம் குறித்து விவரி.

———————

| PG–437 | MAT–25 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2019.

Second Year

தமிழ்

இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours | Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விடையளி.

1. இலக்கியத் தன்மையை விளக்குக.

2. திறனாய்வு குறித்து டி.எஸ்.எலியட்டின் கருத்துக்கள் யாவை?

3. நடப்பியல்-குறிப்பு வரைக.

4. நடையின் இரண்டு பண்புகளைக் கூறுக.

5. தண்டியின் காப்பிய இலக்கணக் கூறுகளைத் தருக.

6. படிமவியல் - குறிப்பு வரைக.

7. திரைக் கதையின் அடிப்படைப் பண்புகளை விளக்குக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விரிவாக விடையளி.

8. இலக்கியமும் நுண்கலைகளும் பற்றி எழுதுக.

9. தமிழ்த் திறனாய்வின் தொடக்கப் புள்ளிகளை விவரி.

10. இலக்கிய இயக்கங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

11. உரையாசிரியருக்கும் திறனாய்வாளருக்குமான ஒற்றுமை வேற்றுமைகளை விவரி.

12. திறனாய்வு வகைகளைச் சுட்டி, ஏதேனும் ஒன்றை விளக்குக.

13. புதுக்கவிதை உருவம், உத்திகள், வகைகளை விவரி.

14. திறனாய்வு முன்னோடிகள், நூல்களை முன்வைத்து தமிழ்த் திறனாய்வுப் போக்கினை விவரி.

———————